DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE FAST TRACK COURT (M.L) UTHAMAPALAYAM

Case No. STC.No.112/2024
Deposition of DW2

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.போதுமணி |
| Father's / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | உத்தமபாளையம் |
| Calling | : | |
| Age | : | 49 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th day of June 2026.
புகார்தாரர் ஆஜர். எதிரி ஆஜர்.

<u>முதல் விசாரணை:</u>

புகார்தாரரை எனக்கு தெரியும். எதிரி அருண்குமாரை தெரியும். எனது முதல் கணவரின் பெயர் மோகன் ஆகும். அவருக்கு மூன்று பிள்ளைகள், அதில் மூத்த மகளின் பெயர் முருகேஸ்வரி ஆகும். முருகேஸ்வரியை எதிரிக்கு திருமணம் முடித்துக் கொடுத்துள்ளோம். கடந்த இரண்டரை வருடத்திற்கு முன்பு நான் சுப்புராஜிடம் 5000 வாங்கினேன், அதற்கு ரூ.7500/- திருப்பி செலுத்தி உள்ளேன். அதன் பின்னர் சுப்புராஜிடம் பத்தாயிரம் நான் வாங்கி 15 ஆயிரம் திருப்பி கொடுத்து விட்டேன். நான் பத்தாயிரம் வாங்கிய போது எனது மருமகன் அருண்குமாரின் காசோலையை சுப்புராஜிடம் கொடுத்திருந்தேன். பணத்தை திருப்பி கொடுத்துவிட்டு காசோலையை கேட்டபோது பார்த்து தருவதாக கூறி காசோலையை தரவில்லை. எனது மருமகனும், மகளும் பேசுவதில்லை. அதனால் சுப்புராஜ் வழக்கு தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியாது. சின்னமனூர் சங்கத்திலிருந்து எனக்கு வழக்கு சம்பந்தமான தகவல் கூறினார்கள். நான்

சென்று சுப்புராஜிடம் கேட்டதற்கு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், அங்கு பார்த்துக் கொள்வதாகவும் கூறினார். எனது மருமகனின் காசோலையை அவருக்கு தெரியாமல் எடுத்து சென்று புகார்தாரரிடம் நான் தான் கொடுத்தேன்.

<u>புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள் படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.06.11 16:45:57 +0530

J.M, F.T.C(M.L),Uthamapalayam